# நவம்பர் – 07 – புதன்

## புனித வில்லிபிராட்

### தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின்னால் வருபவர் எனக்குச் சீடராய் இருக்க முடியாது (லூாக்.14:27)

**முதல் வாசகம் : பிலிப்பியர் 2 : 12 – 18**

என் அன்பர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்படிந்து வருகிறீர்கள் நான் உங்களிடம் வந்தபோது மட்டுமல்ல, அதைவிட அதிகமாக உங்களோடு இல்லாத இப்பொழுதும் கீழ்ப்படிந்து வருகிறீர்கள். எனவே நீங்கள் அச்சத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் மீட்புக்காக உழைத்து வாருங்கள்.ஏனெனில், கடவுளே உங்களுள் செயலாற்றுகின்றார். அவரே தம் திருவுளப்படி நீங்கள் செயல்படுவதற்கான விருப்பத்தையும் ஆற்றலையும் தருகிறார். முணுமுணுக்காமலும், வாதாடாமலும் யாவற்றையும் செய்யுங்கள். அப்பொழுதுதான் நீங்கள் நெறிகெட்ட, சீரழிந்த தலைமுறையினரிடையே குற்றமும் கபடுமற்றவர்களாய்க் கடவுளின் மாசற்ற குழந்தைகளெனத் திகழ்வீர்கள் உலகில் ஒளிரும் சுடர்களாகத் துலங்குவீர்கள்.கிறிஸ்துவின் நாளில் நான் பெருமையடையும் வகையில், வாழ்வின் வார்த்தையைப் பற்றிக்கொள்ளுங்கள். வீணாக நான் ஓடவில்லை, வெறுமனே நான் உழைக்கவில்லை என்பது அதனால் தெளிவாகும்.நம்பிக்கையால் நீங்கள் படைக்கும் பலியில் நான் என் இரத்தத்தையே பலிப்பொருளாக வார்க்கவேண்டியிருப்பினும் அது எனக்கு மகிழ்ச்சியே. அம்மகிழ்ச்சியை நான் உங்கள் அனைவரோடும் பகிர்ந்துகொள்கிறேன். அதுபோலவே நீங்களும் மகிழ்ச்சியடையுங்கள். உங்கள் மகிழ்ச்சியை என்னோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு

**நற்செய்தி : லூக்கா 14 : 25 – 33**

அக்காலத்தில், பெருந்திரளான மக்கள் இயேசுவோடு சென்றுகொண்டிருந்தனர். அவர் திரும்பிப் பார்த்து அவர்களிடம் கூறியது:"என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள் ஆகியோரையும், ஏன், தம் உயிரையுமே என்னைவிட மேலாகக் கருதினால், அவர் என் சீடராயிருக்க முடியாது.தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்கமுடியாது."உங்களுள் யாராவது ஒருவர் கோபுரம் கட்டவிரும்பினால், முதலில் உட்கார்ந்து, அதைக் கட்டிமுடிக்க ஆகும் செலவைக் கணித்து, அதற்கான பொருள் வசதி தம்மிடம் இருக்கிறதா எனப்பார்க்கமாட்டாரா? இல்லாவிட்டால் அதற்கு அடித்தளமிட்ட பிறகு அவர் கட்டிமுடிக்க இயலாமல் இருப்பதைப் பார்க்கும் யாவரும் ஏளனமாக,"இம்மனிதன் கட்டத் தொடங்கினான் ஆனால் முடிக்க இயலவில்லை" என்பார்களே! "வேறு ஓர் அரசரோடு போர் தொடுக்கப்போகும் அரசர் ஒருவர், இருபதாயிரம் பேருடன் தமக்கு எதிராக வருபவரைப் பத்தாயிரம் பேரைக்கொண்டு எதிர்க்க முடியுமா என்று முதலில் உட்கார்ந்து சிந்தித்துப் பார்க்கமாட்டாரா?எதிர்க்க முடியாதெனில், அவர் தொலையில் இருக்கும்போதே தூதரை அனுப்பி, அமைதிக்கான வழியைத் தேடமாட்டாரா?அப்படியே, உங்களுள் தம் உடைமையையெல்லாம் விட்டுவிடாத எவரும் என் சீடராய் இருக்க முடியாது.

**தியானம்:** இயேசுவின் காலத்தில் அவருக்கு அதிகமான இரசிகர்கள் கூட்டம் இருந்தது. ஆனால் சீடர்கள் கூட்டம் மிகவும் குறைவாகவே இருந்தது. இயேசு அற்புதங்கள் செய்கிறார், உணவு கொடுக்கின்றார், வித்தியாசமான போதனைகள் நிகழ்த்துகிறார் என்று சொல்லி அவருக்குப் பின்னால் பலதரப்பட்ட மக்கள் பின் தொடர்ந்து சென்றார்கள். இயேசுவிடமிருந்து ஏதோ ஒன்றை எதிர்பார்த்து அவர்கள் அவரை பின்தொடர்ந்தனர். ஒவ்வொருவரும் தங்கள் நோக்கம் நிறைவேறியவுடன் இயேசுவை விட்டு விலகிச் சென்றார்கள். நோய் நீங்கியவுடன் நோயாளர்கள் சென்று விட்டனர். விடுமுறை நேரத்தைச் செலவிடச் சென்றவர்கள் விடுமுறை முடிந்தவுடன் தங்கள் அலுவலகளுக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர். ஆனால் ஒருசிலர் மட்டும் இயேசுவை விடாமல் பின் தொடர்ந்து கொண்டே சென்று கொண்டிருந்தார்கள். இயேசுவின் மூலம் எதைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தன்னலத்தோடு வாழ்ந்தவர்கள் அல்ல மாறாக இயேசுவே தங்களுக்கு வேண்டும் என்று நினைத்தவர்கள் மட்டுமே அவர் எங்கு சென்றாலும் பின்தொடர்ந்து கொண்டே சென்று கொண்டிருந்தார்கள். இயேசுவே நீர் வேண்டும், நீர் மட்டும் எனக்குப் போதும் என்று தாகத்தோடு அவரை தேடுகின்ற இத்தகைய மனிதர்களைத்தான் இயேசு தன்னுடைய சீடராக சீடத்தியாக தன்னுடைய பிரதிநிதிகளாக இந்த உலகத்தில் ஏற்படுத்துகின்றார். இவ்வாறு ஒரு மனிதன் தன்னுடைய சீடானாக சீடத்தியாக அவரைப் பின்பற்ற வேண்டும் என்று நினைத்தால் அவர் மூன்று காரியங்களைச் செய்ய முன்வர வேண்டும் என்று இயேசு இன்றைய நற்செய்தி வாசகத்தின் வழியாக அறிவுறுத்துகின்றார்: முதலாவதாக எல்லாவற்றிற்கும் மேலாக தம்மை அன்பு செய்ய வேண்டும். உறவுகளுக்கும் உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பவர்கள் இயேசுவின் சீடர்களாக வாழ முடியாது. இரண்டாவதாக சிலுவைகளை, துன்பங்களை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும். மூன்றாவதாக உடமைகள், செல்வங்கள் மீது கொண்ட பற்றை அறவே விட்டுவிட முன்வர வேண்டும். இவ்வாறு ஒரு மனிதன் இறைவனுக்காக தன்னை பலியாக்க முன்வரும்போது அவனை ஆண்டவர் வல்லமையாக பயன்படுத்துகின்றார். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் ஒழிய அது மிகுந்த பலனைத் தர முடியாது (யோவா.12:24). வெட்டுவதற்கும் தரிப்பதற்கும் அனுமதிக்காத எந்தக் கொடியும் கனி கொடுக்க இயலாது (யோவா.15:2). இன்றும் இயேசுவுக்கு இரசிகர்கள் கூட்டமே அதிகமாக இருக்கின்றது ஆனால் சீடர்கள் கூட்டம் மிகவும் குறைவு. நாம் இயேசுவுக்கு இரசிகர்களாக இருக்கப்போகிறோமா? அல்லது சீடர்களாக சீடத்திகளாக வாழ முயற்சி எடுக்கப்போகின்றோமா? சிந்திப்போம்…